**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**A041 இலக்கிய வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இடைச்சங்கம் நிலவி இருந்த ஊர் எது?
2. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் எத்தனை?
3. ஆசாரம் என்ற வடசொல்லின் பொருள் என்ன?
4. இரட்டைக் காப்பியங்கள் எவை?
5. முதல் மூன்று தேவாரத் திருமுறைகளைப் பாடியவர் யார்?
6. மூன்று ஆழ்வார்களும் சந்தித்த இடம் எது?
7. பெரிய திருமொழியை எழுதியவரைக் குறிப்பிடுக?
8. தனிப்பாடல்கள் எழுதிய பல்லவ மன்னனின் பெயர் யாது?
9. அருங்கலச் செப்பு என்ற சொல்லின் பொருள் என்ன?
10. வச்சணந்தி மாலையின் ஆசிரியரைக் குறிப்பிடுக?
11. 'நாண்மீன்' என்பது எதைக் குறிக்கின்றது?
12. 'அருணகிரி அந்தாதி' பாடியவர் யார்?
13. தருமபுர மடத்தைத் தொடங்கியவரைக் குறிப்பிடுக?
14. பிரபுலிங்க லீலை என்னும் நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?
15. உ.வே.சாமிநாதையருக்கு ஆங்கில அரசு வழங்கிய பட்டம் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. தொல்காப்பிய நூல் அமைப்பினை எழுதுக?
2. பதினெண் கீழ்க்கணக்கில் போர் இலக்கியம் குறித்தெழுதுக?
3. கிளிவிருத்தம் என்றால் என்ன?
4. மாணிக்கவாசகரின் பக்தி வெளிப்பாட்டு முறையை விவரி?
5. திவாகர நிகண்டு குறிப்பு வரைக?
6. அடியார்க்கு நல்லார் உரையின் சிறப்பினை எழுதுக?
7. குமரகுருபரர் இயற்றியுள்ள நூல்களைக் குறிப்பிடுக?
8. தமிழ் நாடக வளர்ச்சியில் கோபால கிருஷ்ணபாரதியின் பங்களிப்பினை விவரிக்க?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) எட்டுத்தொகை நூல்கள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) நீதிநூல்களின் வரலாற்றினை விளக்கி வரைக.

2. (அ) ஏழாம் நூற்றாண்டின் சைவ இலக்கியங்களை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) பதினோராம் நூற்றாண்டு இலக்கிய உரைநூல்களை விவரிக்க.

3. (அ) கிறித்தவர்களின் தமிழ்த்தொண்டினைச் சான்றுடன் நிறுவுக.

(அல்லது)

(ஆ) சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை எழுதுக.

***